# "அரங்கேற்ற கலைமணி" இரணியல் கலைத்தோழன் – பேரறிஞர் அண்ணா நாடகங்களில் கதாபாத்திரங்களின் தன்மை – ஓர் ஒப்பீடு

*முனைவர் சா. கலைப்புனிதன்*
பேராசிரியர், ஸ்ரீ வெங்கடேஸ்வர சட்டக் கல்லூரி, திருப்பதி

மலர்: 4
இதழ்: 3
மாதம்: ஜனவரி
வருடம்: 2020
P-ISSN: 2454-3993
E-ISSN: 2582-2810

கண்ணின் வழியும் செவியின் வழியும் பேரூற்றுகளாகப் பாய்ந்து சென்று, மனம் என்கிற கடலில் கலந்து சிந்தனைத் தெளிவு என்கிற எழுச்சிமிகு அலைகளை எழுப்புவது நாடகம். அந்தச் சிந்தனை அலைகள் மனித தன்மைக்கு மாறுபட்ட மாசுக்களையும் நூல்களையும் கொண்டு வந்து கரையில் ஒதுக்கித் தள்ளி மனக்கடலை மாசற்றதாக மாற்றுகிறது. அதனால் மனம் தூய்மை அடைகிறது. இவ்வரிய பணியினை நாடகம் தவிர வேறெந்தக் கலையாலும் செய்ய இயலாது. எனவே நாடகம் கலைகளுள் மேம்பட்டதாகக் போற்றப்படுகிறது என்று கூறும் முனைவர் மு. தங்கராசுவின் கூற்று மேனாட்டு அறிஞர் பெவின்ஸ்கின் கூற்றுப் போல் நம்மை மெய்ச்சிலிர்க்கச் செய்கிறது. இத்தகைய நாடகத்தை தமிழகத்தில் சிறப்பாகக் கையாண்டு வெற்றிப் பெற்றவர்களில் பேரறிஞர் அண்ணாவும் ஒருவர்.

பேரறிஞர் அண்ணா சிறுகதை நெடுங்கதை நாடகம் கட்டுரை என்று எல்லாத் துறைகளிலும் முத்திரைப் பதித்தவர். ஆனால் அவர் மிகவும் விரும்பியது நாடகத்துறையைத் தான். நம்முடைய சமூகம் புதிய உருவத்தைப் பெற்றாக வேண்டும். மக்கள் மனதில் தீவிரமான மாற்றங்கள் ஏற்பட வேண்டும். இவற்றை ஏற்படுத்துவதில் சிறுகதைகள் நாவல்கள் கட்டுரைகளை விட நாடகத்தின் மூலம் சிறந்த பலன்கள் கிடைக்கும் என்ற நம்பிக்கை வைத்திருக்கிறேன், என்று அண்ணாவே பலமுறைச் சொல்லியுள்ளார். அனைத்துத் துறைகளிலும் அண்ணா வெற்றிப் பெற்றதற்கு காரணம் அவர்தம் நாடகத்திறனே ஆகும். அடிப்படையில் அவர் ஒரு நாடக ஆசிரியர். அதன்பின்னே புதின ஆசிரியர், சிறுகதை ஆசிரியர், இதழாசிரியர், கவிஞர், ஓவியர், கட்டுரை ஆசிரியர், சொற்பொழிவாளர், அரசியல் ஞானி, தேர்ந்த அமைச்சர் முதலான பெருமைகள் அவர்க்குரியனவாகும். அவருடைய சிறுகதை, புதினம், கட்டுரை, பேச்சு கடிதம் அனைத்திலும் நாடக வீச்சுகள் உண்டு.

அண்ணா நாடகத்தை தம்முடைய நோக்கத்திற்குப் பெரிதும் துணை செய்யும் ஊடகம் என்று தேர்ந்து தெளிந்தது மட்டு மின்றி அத்துறையில் ஒப்பாக யாருமின்றி உயர்ந்து நின்றார். திரைப்படத் துறையிலும் நுழைந்து அங்கும் வரலாறு படைத்தார்.

கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த இரணியல் கலைத்தோழனும் நாடகத்துறையில் குறிப்பிடத்தக்க பங்காற்றியுள்ளார். 66 ஆண்டுகளாக நாடகம் மூலம் கிராமங்களில் தமிழை பரப்ப பெரும் முயற்சி எடுத்து வருகிறார். இவர் 37 சமூக நாடகங் களையும், 17 சரித்திர நாடகங்களையும், 12 சிறு நாடகங்களையும், 13 ஓரங்க நாடகங் களையும் எழுதியுள்ளார். கிராமங்களில் நாடக ஆர்வம் உள்ள தமிழ் தெரியாத இளைஞர்களுக்கு தமிழைக் கற்றுக் கொடுப்பதோடு நல்ல உச்சரிப்பும் நடிப்பு பயிற்சியும் கொடுத்து நாடக மேடை மூலம் தமிழ்ப் பணியாற்றி வருகிறார். கன்னியாகுமரி, மாவட்டத்தில் இவர் நாடகங்கள் மேடையேறாத கிராமங்களே இல்லை எனலாம். இரண்டாயிரத்து ஐநூறுக்கும் மேற்பட்ட மேடைகளில் இவரது நாடகங்கள் நடிக்கப்பட்டுள்ளது சிறப்பம்சமாகும். இவரும் ஆசிரியர், பத்திரிக்கையாளர், இலக்கியவாதி, நாடக ஆசிரியர், ஓவியர், கட்டுரையாளர், சிறந்த பேச்சாளர் என பன்முகங்களைக் கொண்டிருந்தாலும் இவர் நாடகத்தின் மூலம் சமூகத்தில் பெரும் மாற்றத்தைக் கொண்டுவர முடியுமென்று நம்பியதன் காரணமாகத் தான் தனது நாடக கதாபாத்திரங்களைசமூகநலன்மேம்படுத்தும் நோக்கிலேயே அமைத்துள்ளார். சரித்திர நாடகங்கள், சமூக நாடகங்கள், சிறு மற்றும் குறு நாடகங்கள், ஓரங்க நாடகங்களென்று எந்த வகையைச் சாா்ந்த நாடகமாக இருந்தாலும் அந்த நாடகம் சமூகத்துக்கு நல்ல கருத்தைச் சொல்லும் நாடகமாகவே வடிவமைக்கப்பட்டுள்ளது.

**பேரறிஞர் அண்ணாவின் கதாபாத்திரங்களின் தன்மை**

வேலைக்காரி, ஓர் இரவு, சந்திரோதயம் ஆகிய நாடகங்களில் வரும் வேதாச்சல முதலியார், கருணாகரத் தேவர், ஜெகவீரன், சிங்காரவேலன் முதலானோர் பணத்தின் மீது பற்றுக் கொண்டவர்களாகவும், “சந்திர மோகனில்” வரும் காசுபட்டர், “காதல் ஜோதி” யில் வரும் வாஞ்சிநாத சாஸ்திரி, “இன்ப ஒளியில்” வரும் குருக்கள் திருமுடியார் ஆகியோரை அரிய தருமத்திற்காக எதையும் செய்யத் தூண்டுபவர்களாகவும் பேரறிஞர் அண்ணாவால் சித்தரிக்கப்பட்டுள்ளனர்.

அண்ணாவின் நாடக மாந்தர்கள் அனை வரையும் இருபிரிவாகப் பிரித்து விடலாம். ஒன்று சீரழிப்பவர்கள், மற்றது சீரழிபவர்கள். ஆங்காங்கு சீராக்க வேண்டுமென்று எண்ணம் கொண்டவர்களையும் அதற்காக உழைப்பவர் -களையும் பார்க்க முடிகிறது. ஆனால் அவர்களும் சீரழிபவர்களாகவே இருக்கிறார்கள். சீரழிபவர்கள் சமூகத்தில் மதிக்கப்படுபவர்களாக பெருமைக்குரியவர்களாகமிடுக்காக, எதிர்ப் பவர் யாருமில்லை என்ற இறுமாப்போடு உலா வருகிறார்கள். அவர்களால் எத்தனைக் குடும்பங்கள் பாழாகின்றன என்பது குறித்து அவர்களுக்குக் கவலையில்லை. பார்க்கப் போனால் அப்படி எண்ணற்ற குடும்பத்தைப் பாழாக்கித்தான் இவர்கள் வாழ்வு செழிக்கிறது. சமயம் சாத்திரம் சம்பிரதாயம் சட்டதிட்டங்கள் சமூக நெறிகள் அனைத்தும் அவர்களுக்கு ஆதராவாக அமைந்து விட்டதால் அவர்களை தட்டிக் கேட்க யாருமில்லை. எவரேனும் ஓரிருவர் சிந்திக்கத் தொடங்கி அவர்களை எதிர்க்கத் தொடங்கினால் எதிர்ப்பாளர்கள் எப்படி அடக்குவது எந்த இடத்தில் வைப்பது என்பது அவர்களுக்குத் தெரியும். இவர்களே அண்ணாவின் நாடகங்களில் எதிர்நிலை மாந்தராக வருபவர்கள் சந்திரோதயம் நாட கத்தில் சிங்காரவேலர், வாஞ்சிநாத சாஸ்திரி, மடாதிபதி, பரமதயாளுசேட் வரதன்

ஆகியோரில் ஒவ்வொருவரும் ஒரு விதத்தில் ஊரார் சொத்தை விழுங்குகிறார்கள். "வேலைக்காரி" வேதாச்சல முதலியார் ஜமீன்தார் அவருடைய ஒவ்வொரு மூச்சும் பணம் பணம் என்றே ஒலிக்கும். கோவில் வழிபாட்டின் போதுகூட அது மாறுவதில்லை.

"ஓர் இரவு" கருணாகரத்தேவர் சற்றேப் பண்பட்டவர் இருப்பினும் ஜமீன்தாரர்களுக்கே உரிய பலவீனங்கள் அவரைவிட்டு விலகவில்லை. ஜமீன்தார் ஜெகவீரன் கயமைக் குணங்கள் அனைத்தும் கொண்டவன். சீமான் செட்டியார், புதுப்பணக்காரர், பணத்தால் வரும் சுகங்களையும் அதிகாரத்தையும் முற்றாக அனுபவிக்க வேண்டும் என்ற வேட்கை கொண்டவர். பாத்திரப் படைப்பில் அண்ணா மிகுந்த அக்கறை எடுத்துக் கொண்டுள்ளார். சமூகத்தை ஏய்த்துப் பிழைப்பு நடத்துபவர்கள் உருவானதற்கான சமூக அமைப்பு முறை, அது அமைந்த விதம், அமைந்ததற்கான அடிப்படைக் காரணங்கள், அது நூற்றாண்டுகளாக நிலைத்து நிற்பதற்காக அவர்கள் மேற்கொண்ட வழிமுறைகள் முதலியவற்றை சமூகவியல் முறையிலும் உளவியல் முறையிலும் நாடகம் பார்ப்பவர்களும் படிப்பவர்களும் உய்த்துணர்ந்து தெளிவாகப் புரிந்து கொள்ளும் வண்ணமாக நாடகங்களை ஆக்கியுள்ளார். இந்த நாடக மாந்தர்கள் அவர்களின் மனப்பாங்கு, அவர்களை உருவாக்கியச் சமூகச்சூழல் அவர்களின் செயல்பாடுகள் அவற்றால் அவர்களைச் சேர்ந்தவர்களும் சமூகமும் அடையும் பாதிப்பு, அவர்கள் சந்திக்கும் வெற்றிகள், தோல்விகள் அவர்களையும் மீறிச் சமூகத்தில் தோன்றி வரும் எழுச்சியையும் பிரதிபலிக் கின்றன.

"பாவையின் பயணம்" தமிழகத்துப் பெண்கள் காலம் காலமாகச் சந்தித்து வரும் அவலத்தைப் பறைசாற்றுகிறது. காலம் மாறினாலும் பெண்களின் கண்ணீர் துடைக்கப் படுவதில்லை.

கண்ணாயிரத்தில் உலகம் சிங்காரவேலர் சுரண்டல் மன்னர். எத்தனை விதங்களில் யார் யாரை சுரண்ட வேண்டுமென்ற வித்தையை ஐயம் திரிபற கற்று வைத்திருப்பவர். மனிதாபிமானம் மருந்துக்குகூட இல்லாதவர்.

"ரொட்டித்துண்டு" நாடகத்தில் பாரத்பூ"ன் என்ற எழுத்தாளன், வேறு ஒருவனின் கதையைத், தன் பெயரில் வெளியிட்டுப் பேரும் புகழும் பெறுகிறான். தன் எழுத்தைத் திருடிய முதலாளிக்கு எதிராக எதுவும் செய்ய முடியாமல் துடித்துப் போகும் ஏழை கதிர்வேலின் அவலத்தைக் கண்முன்னே நிறுத்துகிறது.

**இரணியல் கலைத்தோழனின் நாடக கதாப்பாத்திரங்களின் தன்மை**

"கல்நெஞ்சன்" நாடகத்தில் சித்தரிக்கப் பட்டுள்ள "கருணாகரன்" கதாபாத்திரம் ஜாதி வெறியர்களையும் அவர்களது ஈனச் செயலையும் நினைவுப்படுத்துவதாக உள்ளது. சமூகத்தில் தன் அந்தஸ்த்தும் கௌரவமும் எவ்விதத்திலும் பாதிக்கப்படக் கூடாது. அதற்காக எல்லாத் தீயவைகளையும் செய்யும் கீழ்த்தரமான எண்ணம் கொண்டவன். உயர் ஜாதி வகுப்பைச் சேர்ந்த கருணாகரன் தன் பிள்ளைகள் கீழ் ஜாதியைச் சேர்ந்தவர்களை விரும்புகிறார்களென தெரிந்து அவர்கள் காதலை அறுத்தெரிய துணிந்த கொடியவன். இன்று ஊருக்கள் உத்தமன் போல் நடித்துவிட்டு பல்வேறு அக்கிரமச் செயல்களில் ஈடுபடும் பெரிய மனிதர்களை தோலுரித்துக் காட்டும் கதாபாத்திரமாக படைத்துள்ளார்.

அதே நாடகத்தில் இடம்பெற்றுள்ள பாஸ்கர் கதாபாத்திரம் மூலம் மேல்ஜாதி கீழ்ஜாதி என்ற பாகுபாட்டை களைந்து மனித ஜாதி என்ற ஒரே குலம் தான் இருக்க வேண்டுமென்றும் காதலுக்கு ஜாதியோ மதமோ தடையாக இருக்ககூடாதென்றும்

அழுத்தமாகச் சொல்லியுள்ளார். கல் நெஞ்சன் நாடகத்தில் செல்வம் மனோகரன் கதாபாத் திரங்கள் முற்போக்கான எண்ணம் கொண்ட சமூக மறுமலர்ச்சியை காண விரும்பும் இளைஞர்களைப் பிரதிபலிப்பாக சுட்டிக் காட்டிக் காட்டப்பட்டுள்ளது.

"இலட்சியப் பயணம்" நாடகத்தின் கதா பாத்திரங்களில் தயாளன் கதாபாத்திரம் நாட்டுப்பற்றுள்ள ஒரு இளைஞன் இந்த சமூகத்தைக் காப்பாற்ற அவன் செய்கின்ற பல தியாகங்களை வெளிக்கொணர்வதாக படைக்கப்பட்டுள்ளது. கொண்ட கொள்கையில் உறுதியாக இருந்து அந்த கொள்கையை நிறைவேற்றுவதற்கு சுயநலவாதிகளால் போடப்படும் பல்வேறு தடைகளையும் தகர்த்தெறிந்து இறுதியில் தனது இலட்சியத்தை எவ்வாறு அடைகிறான் என்பதை ஆசிரியர் நயம்பட எடுத்துரைத் துள்ளார். அதே நாடகத்தில் வரும் ஐம்புலிங்கம் இக்கால அரசியல்வாதிகளின் குணாதிசியங்களையும், ஊரை ஏமாற்றி ஏழைகளை உருட்டி மிரட்டி அவர்தம் சொத்துக்களை அபகரித்து உல்லாசமாக வாழும் ஏமாற்றுப் பேர்வழியாகவும் அடையாளம் காட்டப்பட்டுள்ளார். வன்முறை மூலம் எதையும் சாதிக்கலாம் என்ற தவறான கொள்கையை வகுத்துக் கொண்டு அதிலே பயணித்த நாகராஜன் இறுதியில் வன்முறையைவிட அகிம்சையே சிறந்தது என்று உணர்ந்து வருந்துகிறான். விஸ்வம் கதாபாத்திரம் சுரண்டி பிழைக்கும் சுயநலவாதியை நினைவுப்படுத்துகிறது.

"நெருப்பில் நீராடும் மலர்கள் நாடகத்தின் கதாநாயகியான மணிமேகலை வரதட்சணைக் கொடுமையை எதிர்த்துப் போராடும் வீரமங்கையாகச் சித்தரிக்கப்பட்டுள்ளார். பெண்ணடிமைத்தனம் ஒழியவும், பெண் விடுதலை பெண் சமத்துவம் மலரவும் பெண்ணுரிமையும் கொடுக்கப்படும் போது சமுதாயம் உயருமென்பதை மணிமேகலை மூலம் உரக்கச் சொல்லியுள்ளார். இக்கால மகளிர் நிலையையும், திருமணம் என்ற பெயரில் பெண்படும் அவலத்தையும், பணமில்லையென்றால் ஏழைப் பெண்களின் எதிர்காலம் என்னவாகும் என்பதை யெல்லாம் சுகந்தி கதாபாத்திரம் மூலம் வேதனையுடன் ஆசிரியர் பதிவுச் செய் துள்ளார். பெண்ணைப் பொன்னாக பாது காப்போம் என்ற அற்புதமான கருத்தை இந்நாடகம் மூலம் ஆசிரியர் கூறியுள்ளார்."

## ஒப்பீடு

அரங்கேற்ற கலைமணி இரணியல் கலைத் தோழனும் பேரறிஞர் அண்ணாவும் அடிதட்டு மக்களின் அவலங்களையும் அவர்களின் வாழ்க்கைத் துயரங்களையும் தங்கள் நாடகங்களில் வெளிப்படையாகவும் ஆணித்தரமாகவும் அழுத்தமாகவும் பதிவுச் செய்துள்ளனர். "கல்நெஞ்சன்" கருணாகரனும், "சந்திரோதயம்" சிங்காரவேலர், வாஞ்சிநாத சாஸ்திரி மடாதிபதி தயாளுசேட் கதாபாத் திரமும் ஒரே தன்மையுடைய அதாவது ஊரார் சொத்தை கொள்ளையடிக்கும் சுயநலவாதிகளாக காட்சியளிக்கின்றனர். இலட்சியப் பயணம் நாடகத்தில் வரும் ஐம்புலிங்கமும், வேலைக்காரி, வேதாச்சல முதலியாரும் பணமொன்றையே குறிக்கோளாகக் கொண்டு வாழ்பவர்களாக காட்டப் படுவதும், பாவையின் பயணம் நாடகத்தில் வரும் பாவை நெருப்பில் நீராடும் மலர்கள் நாடகத்தின் முதன்மை கதாபாத்திரமான மணிகேலையுடன் கை குலுக்குகிறாள். வயது முதிர்ந்த பேரரசர் அமலாதியத்தருக்கு வாழ்க்கைப்பட்ட பாவை படும்பாடுகளையும் பெண்ணடிமைத்தனம் பெண்ணுரிமையின் அவசியத்தை மணிமேகலை சொல்வது போல் பாவை கதாபாத்திரமும் உணர்த்துகிறது. பெண்ணின் அவலத்தையும், வேதனையையும் ஏழைப் பெண்களின் கண்ணீரின் வலியையும் எடுத்துரைப்பதில் நாடக ஆசிரியர்கள்

இருவரின் சமூக அக்கறை குறித்த சிந்தனைகள் ஒன்றாகவே உள்ளது என்பதை மேற்படி கதாபாத்திரங்கள் அப்பட்டமாகத் தெரிவிக்கின்றன.

பணத்தால் எதையும் சாதிக்கலாம். எவ்வழியிலாவது பணத்தை சம்பாதிக்க வேண்டுமென்ற குரூர மனம் படைத்தவர்களாக காட்டப்படும் ஓர் இரவு கருணாகரத் தேவரும், ஜமீன்தார் ஜெக வீரனும் கல்நெஞ்சன் கருணாகரனின் குணாதிசயங்களை பின்பற்றுகின்றனர்.

“ஓர் இரவு” சீமான் செட்டியார் மற்றும் “கண்ணாயிரத்தில் உலகம்” சிங்காரவேலர் செய்யும் சுரண்டல்களை இலட்சியப் பயணம் நாகராஜனும் செய்கிறார். ரொட்டித் துண்டு பாரத்புஷன் ஏழை எழுத்தாளன் கதிர்வேலனின் கதையைத் திருடி புகழ் பெறுவதை “இலட்சியப்பயணம்” விஸ்வம் தயாளன் உழைப்பை திருடி உல்லாச வாழ்வு வாழ்வதற்கு இணையாகப் புனையப்பட்டுள்ளது.

சமூகத்தில் புரையோடிக்கிடக்கும் பல்வேறு அவலங்களையும் அதன் வெளிப்பாடுகளையும் மையப்படுத்தியே நாடக மாந்தர்களை உருவாக்கி அதன் மூலம் தங்களது உணர்வுகளைப் பதிவுச்செய்துள்ளனா.

நாடகம் என்ற மிகப்பெரிய தொடர்பு சாதனத்தை இருவருமே சரியான வழியில் பயன்படுத்தி வெற்றிக்கண்டுள்ளனர்.

அரங்கேற்ற கலைமணி இரணியல் கலைத் தோழனின் சிந்தனையும் பேரறிஞர் அண்ணாவின் சிந்தனையும் பல்வேறு கதாபாத்திரங்களின் வழியாக வெளிப் படுத்தப்பட்ட விதம் ஒன்றாகவே உள்ளது. இதற்கு முக்கிய காரணம் என்னவென்றால் இருவரின் சமூகப் பார்வையும் நேராக இருந்தது தான். நாடகம் மூலம், சமூக முன்னேற்றத்திற்கும் சமூக விழிப்புணர்வுக்கும் முயற்சி மேற்கொண்ட இருவருமே பாராட்டுதற்குரியவர்கள்.

**துணை நின்ற நூல்கள்**

1. அண்ணா நாடகங்களில் எதிர்நிலை மாந்தர் அய்யாசாமி. அ. பேராசியார் - விழிகள் பதிப்பகம், சென்னை - 41, முதற்பதிப்பு 2012.
2. இரணியல்கலைத்தோழன், கல்நெஞ்சன் கலை நிலையம், மாங்குழி, கன்னியாகுமரி மாவட்டம், ஜூலை 1998 (மு.ப).
3. இரணியல் கலைத்தோழன், இலட்சியப் பயணம், கலை நிலையம், மாங்குழி, கன்னியாகுமரி மாவட்டம், டிசம்பர் 1994 (மு.ப).
4. இரணியல் கலைத்தோழன், நெருப்பில் நீராடும் மலர்கள், கலை நிலையம், மாங்குழி, கன்னியாகுமரி மாவட்டம், அக்டோபர் 1992 (மு.ப).